ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1998/5 - 2016 දෙසැම්බර් මස 20 වැනි අඟහරුවාදා - 2016.12.20
*1998/5 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 20 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*
*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

### *2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம்*

*2 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான், இக்கட்டளை மூலம் இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்படும் வியாபாரப் பண்ட இனங்கள் தொடர்பில், அவ்அட்டவணையின் II ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவீடுகளில் குறித்துரைக்கப்படும் வீதங்களில் விசேட வியாபாரப் பண்ட அறவீடொன்றை விதிக்கின்றேன். இக்கட்டளை 2016, திசெம்பர் மாதம் 20 ஆந் திகதி தொடக்கம் தொடங்குகின்ற 6 மாத காலப்பகுதியொன்றுக்கு, 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, செல்லுபடியுடையதாதல் வேண்டும்.*

*2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழான 2016.11.10 ஆந் திகதிய 1992/27 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட வெள்ளைச் சீனி (எச். எஸ். குறியீடு இல. 1701.99.10) மற்றும் 1701.99.20) சம்பந்தமான உத்தரவு 2016 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 20 ஆந் திகதியிலிருந்து இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.*

*ரவி கருணாநாயக்க,*
*நிதி அமைச்சர்.*

*நிதி அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2016, திசெம்பர் 20.*

**அட்டவணை**

| I ஆம் நிரல் | | | | II ஆம் நிரல் |
|---|---|---|---|---|
| வியாபாரப் பண்ட இனம் | | | | விசேட வியாபாரப் பண்ட அறவீடு |
| இல. | எச்.எஸ். தலைப்பு | எச்.எஸ். குறியீடு | விவரணம் | |
| 1. | 10.05 | 1005.90 | மக்காச் சோளம் - பிற | கி. கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 10.00 |
| | 10.07 | 1007.10 | இறுங்கு தானியம் (சோர்க்கம்)- விதை | கி. கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 10.00 |
| | | 1007.90 | இறுங்கு தானியம் (சோர்க்கம்) - பிற | கி. கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 10.00 |
| | | | | |
| 2. | 17.01 | | கரும்பு வெல்லம் அல்லது பீற் வெல்லமும் இரசாயன முறையில் சுத்தமான (சுக்கோறோஸ்) வெல்லமும் திண்மையான உருவில் | |
| | | | பதனிடப்படாத சீனி, மேலதிக மணமூட்டப் படாதவையும் நிறமூட்டப்படாதவையும் | |
| | | | பிற | |
| | | 1701.99 | பிற | |
| | | 1701.99.10 | வெள்ளைப் பளிங்குருவான கரும்பு சீனி | கி. கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 13.00 |
| | | 1701.99.20 | வெள்ளைப் பளிங்குருவான பீற் சீனி | கி. கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 13.00 |

01- 139

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.